## தேசிய வடிவமைப்பு நிலையம் - 2015

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய வடிவமைப்பு நிலையத்துடன் இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் அலுவலக உபகரணக் கணக்கின் மீதி ரூபா 11,411,858 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 11,341,858 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 70,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிலையத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 06 சொத்துக் கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 76,793,123 ஆக இருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் அந்தச் சொத்துக்கள் கூட்டுப் பெறுமதி ரூபா 58,391,226 ஆனமையால் ரூபா 18,401,897 ஆன வேறுபாடு காணப்பட்டது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிலையத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 02 சொத்துக் கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 17,561,657 இற்குரிய நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பிரதான அலுவலகமும், நத்தரம்பொத்த செயற்திட்ட அலுவலகம் அமைந்துள்ள காணிக்காகவும் அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தல் அல்லது காணி உரித்துறுதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய வடிவமைப்பு நிலையத்தை தாபிக்கும் அதிகாரச்சட்டம் | நிறுவனத்தை தாபித்தல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்களுக்கு முரணானதாக வேறு நிறுவனமொன்றிலிருந்து படங்கள் மற்றும் வடிவமைப்பிற்காக வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றைப் பெற்று உரிய ஒப்பந்தம் உப ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) தாபன விதிக் கோவையின் II ஆவது அத்தியாயத்தின் 13 ஆவது பந்தியின் 13.3 ஆம் பிரிவு | பதில் கடமை நியமனமொன்று உள்ளபடியான பதவியொன்று வழங்கப்படும் வரை தற்காலிகமான அடிப்படையில் மாத்திரம் நியமிக்க முடியுமாக இருந்ததுடன் உரிய பதவிக்கு முழுநேர உத்தியோகத்தரொருவரின் சேவை தேவைப்படுமாயின் உள்ளபடியான நியமனமொன்று தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் வெற்றிடமாகவுள்ள பதவிக்கு பதில் கடமைக்காக அந்தப் பதவியினைச் செய்வதற்கு சகல வகையிலும் முழுமையாக தகைமைகளுடனான உத்தியோகத்தர் நியமிக்க முடியுமாக இருந்த போதிலும், பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் / தகவல்) பதவியில் பதில் கடமைக்காக 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதில் கடமைப்படி செலுத்தப்படாமல் நிறுவனத்தின் உதவிக் கணக்காளர் நியமிக்கப்பட்டிருந்தார். |
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | செயல்நிமித்த முற்பணம் அது வழங்கப்பட்ட பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 செப்தெம்பர் 09 ஆந் திகதி வடிவமைப்பு ஆலோசனை நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 15,600 முற்பணம் 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 33 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 371,105 கூட்டுத்தொகையான முற்பணம் 01 மாதம் முதல் 04 மாதங்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. |

(ii) நிதிப்பிரமாணம் 760 — மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் ரூபா 56,975 கூட்டுத்தொகையான இருப்பு பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், அந்த பற்றாக்குறை தொடர்பாக கண்டறிந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஈ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மையின் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை

(i) 5.4.4(1) ஆம் பிரிவு — தேசிய வடிவமைப்பு நிலையத்திற்காக இணையதளமொன்றை வடிவமைக்கும் போது ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதம் ஆகக்கூடிய முற்பணமொன்று செலுத்த முடியுமாக இருந்த போதிலும் 50 சதவீதமான ரூபா 79,420 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 8.9.1(அ) பிரிவு — ரூபா 250,000 பெறுமதியை விஞ்சுகின்ற ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுத்தில் கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும். அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2.7.5 ஆம் பிரிவு — அமைச்சின் செயலாளரினால் திணைக்களத்தில் பெறுகைகள் குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04(அ) பந்தி — மீளாய்வாண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையில் இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான விபரங்கள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிலையத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,642,938 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 162,853 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 2,805,791 அதிகரிப்பாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய செலவினங்கள் ரூபா 14,281,194 இனால் அதிகரித்திருந்த போதிலும் ஏனைய வருமானம் ரூபா 17,723,087 இனால் அதிகரித்திருந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறை காணப்பட்டதுடன் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது, வடிவமைப்பு நிலையத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 28,032,782 ஆக இருந்ததுடன் அது சீராக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 56,415,422 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிலையத்தில் 2014 ஆம் ஆண்டில் 2:38 ஆகக் காணப்பட்ட நடைமுறை விகிதம், மீளாய்வாண்டளவில் 1:83 விகிதம் வரை குறைவடைந்திருந்தது. இந்த நிலைக்கு மீளாய்வாண்டின் போது U.N.D.P செயற்திட்டத்தின் மூலமான பொறுப்புக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 186 சதவீதத்தால் உயர்வடைந்து சென்றமை காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணி சபையுடன் இணைந்த நிறுவக அதிகாரச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய வடிவமைப்பு நிலையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் அவ்வதிகாரச் சட்டத்தின் 82 ஆவது பிரிவின் பிரகாரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

- ❖ சிறு கைத்தொழில்களுக்கான வடிவமைப்பு வழங்கல்,
- ❖ வடிவமைப்பு மற்றும் பொருள் உற்பத்திக்களுக்கான மூலப்பொருள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்,
- ❖ கைப்பணிப் பொருட்களுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்தல்,
- ❖ வினைத்திறனான கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக செயற்படுதல்,
- ❖ இலங்கை கைப்பணிகள் சபைக்கும் பயிலுனர்களுக்கு கைப்பணிப் பொருள் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை வழங்கல் என்பவற்றுக்காக உதவுதல்,
- ❖ மூலப் பொருட்களுக்காக தரச் சான்றிதழ்களை வழங்குதல்,
- ❖ தரவு வங்கியொன்றைப் பேணிச் செல்லல்,
- ❖ வழங்குகின்ற சேவைகளுக்காக கட்டணம் அறவிடல் மற்றும் சமமான நிறுவனங்களுடன் உடன்பாடுகளில் கைச்சாத்திடல்,

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பணிகளுக்கிடையே தேசிய கண்காட்சிக்கூடம் ஊடாக புதிய வடிவமைப்புக்களை மக்களுக்கிடையே பகிரங்கப்படுத்துதல் மற்றும் தேசிய கண்காட்சிக்கூடம் ஊடாக புதிய வடிவமைப்பு விற்பனை செய்தல் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயலாற்றல் முன்மாதிரியாக, கண்காட்சிக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்ட கைப்பணி வடிவமைப்புக்கள், பார்வையாளர்களினதும் கண்காட்சிக் கூடத்தினதும் விற்பனை வருமானம் குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மீளாய்வாண்டில் இந்த இலக்குகளில் எதனையும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் நியமம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட சான்றிதழ்களை விநியோகித்தல் மற்றும் வடிவமைப்பு, சந்தை மேம்படுத்தலை நோக்காகக் கொண்டு தகவல் வங்கியொன்றை பேணிச் செல்லல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் செயலாற்றல் அறிக்கையை ஒப்பீடு செய்த போது ஒவ்வொரு நோக்கத்தின் கீழுள்ள இலக்குகள் அடையப்படாத 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக 08 பாரம்பரிய கைப்பணிக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நூறு நாட்கள் முடிவடையும் போது 04 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது விற்பனைப் பெறுமதி ரூபா 7,000,000 தொகையான வடிவமைப்புக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும், ரூபா 2,800,00 தொகையான விற்பனைப் பெறுமதியுடன் உள்ள புதிய வடிவமைப்புக்கள் மாத்திரம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிலையத்தின் பிரதான பணியான வடிவமைப்பு நிர்மாணம் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வருடாந்தம் அதிகரித்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 4.88 சதவீதத்தால் அதாவது 43 இனால் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் செயலாற்றல் பணிப்பாளர் சபையினால் முன்னர் ஆற்றப்பட்ட செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், நிலையம் 2015 ஆம் ஆண்டின் போது ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டத்தை மாத்திரம் நடாத்தியிருந்தது.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 109 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 86 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பதவியணியில் 23 பேருக்கு பற்றாக்குறை காணப்பட்டது. இப்பதவியணியினரின் பற்றாக்குறையினால் வேலைப் பகிர்வு மற்றும் உள்ளக கட்டுப்பாடு போன்ற பணிகளை வினைத்திறனானதாக நிறைவேற்றுவதில் தாமதங்கள் காணப்பட்டன. மேலும் நிறுவனத்தின் மூன்று நிரந்தர பதவிகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யாமல் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2015 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 05 மாதகால தாமதத்தின் பின்னர் 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக வேலை மேவுகை அடிப்படையில் ஒரு பெண் உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பதவிக்காக நிரந்தர ஊழியர் ஒருவரைச் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், தேசிய வடிவமைப்பு நிலையம் 2015 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழு கூட்டம் ஒன்றை மாத்திரம் நடாத்தியிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 16 செலவின விடயங்களுக்குரியதாக 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் இறுதிக் கணக்காய்வு செய்யப்பட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கை மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2012 இன் ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பிப்பதற்கு 2015 நவம்பர் 09 ஆந் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்படாமை, வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கும் பொது தீர்க்கப்படாத மீதிகள் காணப்பட்டமை |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை, மெய்மையாய்வுச் சபை நியமித்தல் மற்றும் மெய்மையாய்வு நடாத்துதல் தாமதமாக மேற்கொள்ளப்பட்டமை. |
| (இ) களஞ்சியக் கட்டுப்பாடு | களஞ்சியப் பொருட்கள் மற்றும் கண்காட்சி விற்பனைகளின் எஞ்சிய இருப்புக்கள் நாளது வரையாக பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்படாமை. |
| (ஈ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் உள்ளக சுற்றறிக்கை விநியோகிக்கப்படாமை, உள்ளகக் கணக்காய்வை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) பதவியணியினர் முகாமைத்துவம் | நிரந்தர பதவிக்காக நீண்ட காலத்திலிருந்து ஒப்பந்த ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்ததுல், நிரந்தர பதவிகளின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்படாமை |